# <u>இந்திய உயர் ஸ்தானிகராலயம்</u>
# <u>கொழும்பு</u>

## ஊடக அறிக்கை
***

## <u>இலங்கையில் 9ஆவது சர்வதேச யோகா தின நிகழ்வுகள்; வசுதைவ குடும்பகத்துக்கான யோகா</u>

கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம், அதன் கலாசாரப் பிரிவான கொழும்பு சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயம், அம்பாந்தோட்டையில் உள்ள இந்திய கொன்சுலேட் ஜெனரல் காரியாலயம் மற்றும் கண்டியிலுள்ள இந்திய உதவி உயர் ஸ்தானிகராலயம் ஆகியவை ஒன்றிணைந்து ஒன்பதாவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 2023 ஜூன் 17ஆம் திகதி முதல் 21-ஆம் திகதி வரை பல்வேறு வகையான நிகழ்வுகளை ஒழுங்கமைத்துள்ளன.

2. இத்தினத்தினை அனுஷ்டிக்கும் முகமாக வசுதைவ குடும்பகத்திற்கான யோகா என்ற தொனிப் பொருளின்கீழ் 2023 ஜூன் 17ஆம் திகதி பாரிய பொது நிகழ்வு ஒன்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் காலை 6.45 மணி முதல் நடைபெறவுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சுகாதார அமைச்சு உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும் இந்நிகழ்வில் பொதுமக்கள் இலவசமாக கலந்துகொள்ள முடியும். அத்துடன் ஜூன் 21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்திலும் விசேட யோகா நிகழ்வொன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

3. சர்வதேச யோகா தினத்தின் ஒன்பதாவது பதிப்பில் சிறப்பு நிகழ்வாக ஆட்டிக் முதல் அந்தாட்டிக் வரையிலான யோகா ஆர்வலர்கள் இணைக்கப்படுவார்கள். “பூகோள சமுத்திர வளையம்” ஒன்றினை உருவாக்கும் வகையில் உலகளவில் தெரிவு செய்யப்பட்ட துறைமுகங்களில் இவ்வருடம் யோகா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அதுமட்டுமல்லாமல் 2023 சர்வதேச யோகா தினத்தில் உலகெங்கிலும் உள்ள மக்களை ஆரோக்கியத்திற்கான பொதுவான நோக்கத்தில் இணைக்கும் இம்முயற்சி ஜி20 இந்திய தலைமைத்துவத்துக்கான தொனிப் பொருளான வசுதைவ குடும்பகத்துடன் இணைந்திருக்கும் “ஒரே பூமி ஒரே குடும்பம் ஒரே எதிர்காலம்” ஆகியவற்றை எதிரொலிப்பதாக அமைகின்றது.

4. இலங்கையர்கள் மத்தியில் யோகாவை உள மற்றும் உடல் ரீதியான ஆரோக்கியத்துக்கான ஒரு செயற்பாடாக மேம்படுத்துவதற்காக 2023 சர்வதேச யோகா தினத்தினை முன்னிட்டு சுவாமி விவேகானந்தா கலாசார

நிலையம் ஒரு 50 நாள் முன்னோட்ட நிகழ்வினை ஒழுங்கமைத்துள்ளது. அரசாங்க நிறுவனங்கள் யோகா அமைப்புகள் மற்றும் ஏனைய பங்காளர்களின் ஒன்றிணைவுடன் 2023 மே முதலாம் திகதி முதல் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தினால் யோகா குறித்த நிகழ்வுகள், செயலமர்வுகள், விரிவுரைகள், சிறப்பு நிகழ்வுகள் போன்றவை பல்வேறு வயதினருக்காகவும் தொழில் சார்ந்தவர்களுக்காகவும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் சுதேசிய வைத்திய முறைமைக்கான மருத்துவர்களுக்கான யோகா செயலமர்வு, கொழும்பு மாநகர சபை மைதானத்தில் இடம்பெற்ற யோகா அமர்வு, பாதுகாப்பு படையினருக்காக நாடு முழுவதும் நடைபெற்றுவரும் மூன்று நாள் செயலமர்வு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை குறிப்பிட முடியும்.

5. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 21 ஆம் திகதியை சர்வதேச யோகா தினமாக அனுஸ்டிப்பதற்கான தீர்மானம் இந்தியாவால் ஐக்கிய நாடுகள் சபையில் 2014இல் முன்மொழியப்பட்டு ஐ,நா பொதுச்சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளத்தக்கதாகும். இந்த தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கிய இலங்கையும் 170க்கும் அதிகமான ஏனைய நாடுகளும் இத்தீர்மானத்திற்கு ஆதரவளித்திருந்தன.

6. ஆயுர்வேத முறைமை போலவே யோகாவும் இந்தியா இலங்கை இடையிலான பொதுவான மரபின் ஒரு பகுதியாகும். இலங்கையிலுள்ள இந்திய இராஜதந்திர அலுவலகங்கள் 2015 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தலைமைத்துவம் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றுதலுடன் சர்வதேச யோகா தினத்தினை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றன. ஒவ்வொரு வருடமும் பல்லாயிரக்கணக்கானோர் இந்நிகழ்வில் பங்குபற்றி வருகின்றனர். 2020 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் கொவிட்-19 தாக்கத்திற்கு மத்தியில் இந்நிகழ்வுகள் மெய்நிகர்மார்க்கமாக நடைபெற்றபோது பெருமளவானோர் மிகுந்த ஆர்வத்துடன் இந்நிகழ்வில் பங்குபற்றியிருந்தனர். அதேபோல 2022 ஆம் ஆண்டில் கலப்பு வடிவில் சுதந்திர சதுக்கத்தில் இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டபோதும் பெரும் எண்ணிகையிலானோர் மிகுந்த உற்சாகத்துடன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

***

கொழும்பு
12 ஜூன் 2023